செய்தி வெளியீட்டு எண்: 802 நாள்: 20.09.2010

<u>செய்தி வெளியீடு</u>

**இந்திய அரசின் தெற்கு மற்றும் மேற்கு பகுதி மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் சட்ட முறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள் மண்டல மாநாடு - சென்னை, தி. நகரில் 21.9.2010 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

********

இந்தியாவின் தெற்கு மற்றும் மேற்கு பகுதி மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் சட்ட முறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள் மண்டல மாநாடு சென்னை, தி. நகரில் உள்ள ஜி. ஆர்.டி. கன்வென்ஷன் மையத்தில் 21.9.2010 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்தியாவில் உள்ள நுகர்வோர்களின் உரிமைகளையும், நலத்தினையும் பேணி காப்பதில் புது டெல்லியில் உள்ள சட்டமுறை எடையளவு இயக்ககம் முக்கிய பங்காற்றுகிறது. இதற்காக இயற்றப்பட்ட பழைய சட்டங்கள் பலவும் திருத்தப்பட்டு தற்போதைய பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலைக்கேற்ப சட்டமுறை எடையளவுச் சட்டங்கள் - 2009 கொண்டு வரப்பட்டு, செயல்படுத்தப்பட உள்ளது. இச்சட்டத்தின் நடைமுறை குறித்தும், எடையளவு சட்டங்களை அனைத்து மாநிலங்களிலும் சீரிய முறையில் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் இந்த மாநாட்டில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இந்த மண்டல அளவிலான மாநாட்டில், மகாராஷ்ட்ரா, குஜராத், மத்திய பிரதேசம், கேரளா, ஆந்திரா, கர்னாடகா, தமிழ்நாடு, ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி, கோவா, டாமன், லட்சதீவுகள் மற்றும் சில்வாசா (SILVASA) ஆகிய யூனியன் பிரதேசங்களின் சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள் பங்கேற்று தங்கள் பகுதியில் இச்சட்டத்தினை செயல்படுத்துவது குறித்தும், பணியின்போது ஏற்படும் இடர்பாடுகள் - அவற்றிற்கு தீர்வு காணுவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் தங்களது கருத்துக்களை தெரிவிப்பார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் இம்மாநாட்டினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். மத்திய அரசு நுகர்வோர் நலத்துறையின் கூடுதல் செயலாளர் திரு.ராகேஷ் கக்கர், இ.ஆ.ப., தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் டி. பிரபாகர ராவ், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் திரு. உறன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., புது டெல்லியில் உள்ள சட்டமுறை எடையளவு இயக்குநர் திரு B.N. தீட்சித் மற்றும் தொடர்புடைய மாநிலங்களின் அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர்.

********

20/9/10

**மக்கள் தொடர்பு அலுவலர்**
**தொழிலாளர் ஆணையர் அலுவலகம்**
**தேனாம்பேட்டை, சென்னை-600006**

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9